**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 31.10.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கிராமப்புற இளைஞர்களுக்கு தோட்டக்கலை மற்றும் நில எழிலூட்டல் திறன் மேம்பாட்டு பயிற்சி**

தமிழ்நாடு அரசின் -தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், தொழில் நுட்ப வணிக காப்பகம், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் “நான் முதல்வன் வெற்றி நிச்சயம்” திட்ட நிதி உதவியுடன் கிராமப்புற இளைஞர்களுக்கான தோட்டக்கலை மற்றும் நில எழிலூட்டல் திறன் மேம்பாட்டு பயிற்சி துவக்க விழா 30.10.2025 காலை 9.00 மணியளவில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திரு.A.V.ஞானசம்பந்தம், நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி, தொழில் நுட்ப வணிக காப்பகம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். முனைவர்.E.சோமசுந்தரம், இயக்குநர், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அவர்கள் தலைமையுரையாற்றினார். முனைவர் C.முரளிதரன், பேராசிரியர் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அவர்கள் பயிற்சியாளர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்.

மேலும் முனைவர் M.கங்கா, பேராசிரியர் மற்றும் தலைவர், மலரியல் துறை தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் இப்பயிற்சியின் அறிமுக அமர்வை தொடங்கி வைத்து அதன் முக்கியத்துவத்தை விளக்கினார்.

இந்நிகழ்ச்சியில் செல்வி.C. பரணி ஸ்ரீ, வணிக செயலாளர், தொழில் நுட்ப வணிக காப்பகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நன்றியுரை ஆற்றினார் இப்பயிற்சியில் 25 க்கும் மேற்பட்ட பயனாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மேலும் இப்பயிற்சி தொழில் நுட்ப வணிக காப்பகம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 29.11.2025 வரை சுமார் ஒரு மாத காலம் நடைபெற உள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**